# திராவிடத்தால் வாழ்கிறோம்

1325

எழுத்து கோவி.லெனின்

ஓவியம் கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

**ம**ருத்துவமனையில் மின்வெட்டால் நோயாளிகள் அவதி, திருமண விழாவில் மின்வெட்டு காரணமாக இருளில் அமர்ந்திருக்கும் உறவினர்கள், நள்ளிரவில் மின்வெட்டால் தூங்க முடியாமல் தவிக்கும் குடும்பங்கள், தூக்கமிழந்து தவிக்கும் குழந்தைகள் என மின்வெட்டு குறித்த செய்திகள் விதவிதமாக மணிக்கு ஒருமுறை வந்துகொண்டிருக்கின்றன. மின்வெட்டு குறித்து புகார் சொல்ல, மின்னகத்திற்கு அழைத்தால், `அவர்களும் மின்வெட்டால் அவதிப்படுகிறார்கள்' என்ற செய்தி வருகிறது.

## விடியல் மங்கி இருள் சூழ்ந்தது!

சென்னை, கோவை, மதுரை, நெல்லை, திருச்சி, புதுக்கோட்டை, சேலம், திருவள்ளூர் என தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும் இதுதான் நிலை. `தமிழ்நாட்டை இருளில் தள்ளிவிட்டோம்' என்கிற கவலை முதலமைச்சருக்கும் இல்லை, அதன் துறைசார்ந்த அமைச்சருக்கும் இல்லை. மின்வெட்டைச் சரிசெய்ய என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்றால், மின்சாரத் துறை அமைச்சரிடமிருந்து உரிய பதிலோ, விளக்கமோ வருவதில்லை. தி.மு.க.வைப் பிராண்டுவதுதான் அவர்களுடைய பிழைப்பாக இருக்கிறது.

பத்திரிகையாளர்கள் மடக்கிப்பிடித்துக் கேள்வி கேட்டாலும், ``பஞ்சாப்பில் 15 மணி நேரம் மின்சாரம் இல்லை தெரியுமா?" என்று சம்பந்தம் இல்லாமல் உளறிக்கொண்டிருக்கிறார். மின்சாரத் துறைக்கு சம்பந்தமே இல்லாத அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ், அவருடைய துறையின் வேலைகளைப் பார்க்காமல், ``மின்வெட்டுப் பிரச்சினையைச் சரிசெய்துவிட்டோம்; இனி, தமிழ்நாட்டில் மின்வெட்டே இருக்காது" என்கிறார். ஆனால் அதே நாள் மதியம் வேலூரில், அமைச்சர் செங்கோட்டையன் செய்தியாளர்களுக்குப் பேட்டி கொடுத்துக்கொண்டிருக்கும்போதே மின்வெட்டு ஏற்படுகிறது.

``மாற்றமா? மாற்றமா? வீதியில் நிற்பது மாற்றமா?" என்று மக்கள் குழந்தைகளுடன் சாலைகளில் இறங்கி, தினம்தோறும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். விடியலில் இருந்த தமிழ்நாட்டை, இருளுக்குத் தள்ளுவதற்குப் பெயர், `மாற்றம் அல்ல, ஏமாற்றம்'.

# ஃப்ளாஷ்பேக்



## தலைவரின் கரங்களால் உரிமைத் தொகை!

2008-ஆம் ஆண்டு, அன்றைய முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள், என் தந்தையார் ம.ப.பெரியசாமி தூரன் அவர்களின் நூல்களை நாட்டுடைமை ஆக்கினார். அதற்கான காப்பு உரிமைத்தொகையைத் தலைமைச் செயலகத்தில் என்னிடமும் எனது சகோதரிகள் சாரதாமணி, விஜயவல்லி ஆகியோரிடமும் கலைஞர் வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.



ம.பெ.சுதந்திர குமார்

– ம.பெ.சுதந்திர குமார்,
அடையாறு, சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# காலத்தின் குரல்

## கலைஞர் கட்டமைத்த தமிழ் அடையாளம்

**ச**மூக அரசியல் பார்வையில் மொழிகளை அணுகும்போது, இந்தியாவில் சமஸ்கிருதத்தைத் தவிர பிற மொழிகள் எல்லாமே 'ஒடுக்கப்பட்ட நிலை' மொழிகளாக, சனாதனத்தால் கருதப்படுகின்றன. தன்னை 'தேவபாஷை'யாக நிறுவிக்கொண்ட சமஸ்கிருதம், தமிழையும் பிறமொழிகளையும் 'நீசபாஷையாக' ஒடுக்கியது. பஞ்சமர்களையும் சூத்திரர்களையும் 'கேட்காதே', 'படிக்காதே' என்று பிற மொழிகளையும் தாய்மொழியையும் படிக்கின்ற உரிமையைப் பறித்தது.



ஆரியப் படையெடுப்புக்குப் பிறகு சமஸ்கிருதமும், நாட்டு விடுதலைக்குப் பிறகு இந்தியும் இங்கு ஆதிக்கக் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டுவருகின்றன. நெடுங்காலமாகத் திணிக்கப்பட்டுவந்த இம்மொழியதிகாரம் (Linguistic Dominance), இந்திய மக்களின் ஓர்மையில் பதிந்திருக்கிறது. பெரும்பாலான மக்கள் இன்னும் தாய்மொழித் தன்னுணர்வின்றியே வாழ்கின்றனர்.

தமிழ்மக்கள் செம்மொழித் தமிழின் பெருமையை உணராமல் கிடந்தனர். உடுக்கையின் இரு பக்கங்களிலிருந்து தேவபாஷையும், தமிழும் பிறந்ததாகச் சொல்லப்பட்ட கதைகளை ஏற்றனர். தமிழ் தனித்து இயங்காது, காலத்தால் பிந்தியது என்ற சனாதனவாதிகளின் வாதங்களை ஒப்புக்கொண்டனர்.

### ■ திராவிட இயக்கம்

இந்தியாவில் மொழித் திணிப்பை எதிர்த்த ஒரே அரசியல் பண்பாட்டு இயக்கம், திராவிட இயக்கம் மட்டுமே. தமிழ் மக்களின் மொழி குறித்த ஓர்மையை மாற்றி, மொழி சார்ந்த தன்னுணர்வை (Linguistic Consciousness) இந்நிலத்தில் கலைஞரே உருவாக்கினார். அவரின் இந்தப் பெரும்பணி, ஆப்ரோ-அமெரிக்கப் பண்பாட்டுப் புரட்சியைப் போன்றது. விரிந்ததோர் தளத்தில் சொல்லப்போனால், மதங்களையும் சாதியையும் கடந்து மேற்செல்வது.

கலைஞர் உருவாக்கிய மொழித் தன்னுணர்வு, பிற மொழிகள் மீதும், ஆளுமைகள் மீதும் போலித் தமிழ்த்தேசியவாதிகளும் மதவாதிகளும் காட்டுகிற வன்மமோ, வெறுப்போ அல்ல. அது மொழி வழியாக மானுடம் தழுவிடும் பேரன்பு. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற மானுடப் பிரகடனத்தையும் அடிப்படையாகக் கொண்டது.

தமிழின்மீது கலைஞருக்கு இருந்த அளப்பரிய பற்று, எப்போதுமே வியப்பை அளிக்கக்கூடியது. திரைப்பட உரையாடல்களிலும் எழுத்துகளிலும் பேச்சிலும், வீரியத்துடன் தமிழைப் பயன்படுத்திய அரிய ஆளுமை அவர். செயலூக்கமும் சித்தாந்தத் தெளிவும் கொண்ட மிகச்சிறந்த ஆளுமை, கலைஞர். தமிழ் நிலம் எத்தனையோ தலைவர்களையும் இலக்கியவாதிகளையும் பெற்றுள்ளது. ஆனால் தன் நிலத்துக்கும், தன் மொழிக்கும் பெரும்பணி ஆற்றிய கலைஞரைப் போலொரு தலைவரை, இலக்கியவாதியை அது கண்டதில்லை.

### ■ மொழியும் தேசியமும்

நாட்டுணர்வு உருவாவதற்கான காரணிகளாக மதம், இனம், நிலப்பரப்பு இருந்தாலும் மொழியே (Linguistic Nationalism) முதன்மையானதாக இருக்கிறது. அந்த மொழிதான், ஆதிக்கக் கருவியும்கூட! உலகமெங்கும் மொழியைக் காரணமாகக் கொண்டு நடத்தப்பட்ட போர்களையும் அழிவுகளையும், வரலாறு அறியும். இந்தியாவிலோ, நாட்டுணர்வு உருவாவதற்குக் காரணம் மொழியல்ல, நிலப்பரப்பு. மொழி இங்கு அடக்குமுறைக் கருவி!

எண்ணங்களைப் பரிமாறிக்கொள்ளும் கருவிதான் மொழி என்பது மேலோட்டமான பார்வை. மொழியிடமிருந்து மனிதனைப் பிரித்துவிட்டால் மொழிக்குச் சிறப்பில்லை. மொழியில் சொல்லப்பட்டிருக்கும் அரியதும், முன்னேற்றத்துக்குப் பயன்படுவதுமான கருத்துகளால்தான் அதற்குச் சிறப்பு. மக்களின் சுயமரியாதைக்கும், மேம்பாட்டிற்கும் பயன்படும் வகையில், மொழி இருக்க வேண்டும் என்றார் தந்தை பெரியார். ஒரு மொழியை வைத்து இன்னொரு மொழியை அடிமைப்படுத்துவதை நாங்கள் ஏற்க மாட்டோம். தமிழ் மொழி ஒப்புயர்வற்றது, கவிதைச் செழுமையும் கருத்துச் செறிவும் உடையது என்றார் அண்ணா.



## அழகிய பெரியவன் ■

உழைக்கும் மக்களின் வெளிப்பாட்டிலிருந்து உருவான மொழி, வர்க்க அமைப்புடன் தொடர்புடையதாக மாறியது என்றார் கார்ல் மார்க்ஸ். ஆதிக்க வர்க்கம் தன்னுடைய கருத்துகளைத் தனது சொல்லாடல்களின் மூலமாகவே திணிக்கப் பார்க்கிறது. மொழியை அதிகாரத்தின் கருவியாகக் கையாளுகிறது. சுயநலத்துக்கும் சுரண்டலுக்கும் மொழியைப் பயன்படுத்துகிறது என்றார்.

### ■ கலைஞரின் நோக்கும் முன்னெடுப்பும்

மொழியென்பது சிந்தனை. அச்சிந்தனை தனித்துவமான அறிவுக் கருவூலத்தை உருவாக்குகிறது. மக்களுக்கான அடையாளத்தையும் முன்னேற்றத்தையும் வழங்குகிறது. இதை உணர்ந்துகொள்ள வேண்டுமெனில், மொழி குறித்த தன்னுணர்வை மக்களின் மனங்களில் உருவாக்கிட வேண்டும் என்றெண்ணினார் கலைஞர்.

மானுடச் சிந்தனை கொண்ட அறிவுக் களஞ்சியமாகத் தமிழைக் கண்ட கலைஞர், தமிழ்த் தன்னுணர்வை மக்களிடையே உருவாக்குவதற்கு உழைத்தார்.

தொல்காப்பியத்தையும், சங்கத் தமிழ்க் கவிதைகளையும், திருக்குறளையும் தேர்ந்துகொண்டார். இந்த மூன்று தேர்வுகளும் பொருள் பொதிந்தவை. தொல்காப்பியமே தமிழின் இலக்கணச் சட்டகத்தை உருவாக்குகிறது. தமிழறத்தை வரையறுப்பதில் சங்கக் கவிதைகள் முதன்மையான பங்கினை ஆற்றுகின்றன. அக்கவிதைகள், அறம் குறித்து வரையறுத்துக்கொடுக்கும் சிந்தனைகள் நுட்பமானவை. நன்மை செய்தல், நீதிநெறி, அமைதியான வாழ்வு, அன்பு, பிறர் நலம், காதலின்பம், நேர்வழி பொருளீட்டல், நாட்டு மக்களின் துன்பத்தைப் போக்கி, மகிழ்ச்சி அடையும் வகையில் ஆட்சி செய்தல், சாதியொழிந்த காதல், இவையெல்லாமே சங்கத் தமிழ்க் கவிதைகள் வலியுறுத்திடும் அறங்கள்.

திருக்குறளோ, உலகளாவிய மானுடப் பேரறத்தை வழங்குகிறது. எனவேதான், கலைஞர் முதலில் திருக்குறளைக் கையிலெடுத்தார். திருக்குறளைக் கலைஞர் வாழ்க்கை நெறியென்றார். 'குறளோவியம்' தொடரை முரசொலியில் அவர் எழுதத் தொடங்கிய ஆண்டு 1956. கலைஞரையும் திருக்குறளையும் பிரிக்க இயலாது. போலவே, தமிழ் மக்களையும் திருக்குறளையும் பிரிக்க இயலாது. அதற்கு அடையாளமாகக் கலைஞர் உருவாக்கிய திருக்குறள் சின்னங்கள் ஏராளம்.

கலைஞரின் எழுத்துகளிலும் உரைகளிலும், ஆட்சியிலும் தமிழற விழுமியங்களும், தமிழ்ப் பண்பாட்டு அடையாளங்களும் மிளிர்ந்ததை உலகறியும். தமிழுக்குச் செம்மொழிச் சிறப்பை உருவாக்கி, தாய் மொழியை ஈன்ற பொழுதின் பெரிதுவக்கச் செய்தவர். தமிழ், தமிழ்ப் பண்பாடு சார்ந்து அவர் உருவாக்கிய திட்டங்களைப் பட்டியலிடத் தேவையில்லை. அவை, பொதுவெளியில் இருக்கின்றன.

வருணப் பாகுபாடு, சாதியம், பெண்ணடிமைத்தனம், மூடக்கருத்தியல், பேராசை, அதிகார வெறி, வஞ்சனை, நேர்மையின்மை, இரட்டை நாக்கு, ஏய்ப்பு, முறைகேடு, நயவஞ்சகம், இழிதகைமை, தன்னம்பிக்கைத் தகர்ப்பு, சுயநலம் ஆகிய மானுட விழுமியங்களுக்கு எதிரான கூறுகளை உள்ளடக்கமாகக் கொண்ட ஒரு மதவாத மொழிக்கு மாற்றாக, உயர்தனிச் செம்மொழியாம் தமிழை வரலாற்றின் ஓர்மையிலேயே பதித்தவர் கலைஞர். இவற்றையெல்லாம் தமிழின் வழியாகத் தமிழருக்குச் செய்தார். தமிழர் தன்னுணர்வும் தன்னம்பிக்கையும், பெருமிதமும் கொண்டிலங்கச் செய்தார். ■

# தெரிந்து கொள்வோம்

**1989**

### பெண்களுக்கு 30% இடஒதுக்கீடு

தமிழ்நாட்டில் அரசு வேலைகளில் பெண்களுக்கு 30% இடஒதுக்கீடு வழங்கும் முடிவு, 1989-இல் கலைஞர் தலைமையிலான தி.மு.க. ஆட்சியில் நடைமுறைக்கு வந்தது. பின்னர், உள்ளாட்சி அமைப்புகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட்டது.



Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900